விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 049 வள்ளுவர் ஆண்டு 2055 தை 23 செவ்வாய்க்கிழமை (06.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## மக்களின் ஜனநாயக உரிமைகளை ரணில் அரசு தட்டிப் பறிக்கின்றது

### இந்திய உயர்ஸ்தானிகரிடம் சஜித்

(கொழும்பு)

மக்களின் ஜனநாயக உரிமைகளை ரணில் அரசாங்கம் தட்டிப் பறிக்கின்றது என புதிய இந்திய உயர்ஸ்தானிகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் 15



## பாடசாலைகள் ஜூனுக்குள் டிஜிட்டல் மயமாக்கப்படும்

### யாழில் கல்வியமைச்சர் சுசில்

(யாழ்ப்பாணம்)

உயர்தரத்தைக் கொண்ட பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் டிஜிட்டல் மயமாக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். 15




# அநுரவை டில்லி அழைத்து ஜெய்சங்கர் பேச்சு

### ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்வேளை இந்தியா புதிய காய்நகர்த்தல்

(டில்லி)

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்வேளை ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை டில்லிக்கு அழைத்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பேச்சு நடத்தியது கொழும்பு அரசியலில் பாரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. *(02ஆம் பக்கம் பார்க்க)*



**நிமோனியாக் காய்ச்சல்**

## 14 மாத பெண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

நிமோனியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 14மாத பெண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த 02

## பருத்தித்துறையில் வீதி விபத்து

**மருத்துவர் படுகாயம்**

(கரணவாய்)

வடமராட்சி பருத்தித்துறை பேருந்து சாலைக்கு அண்மித்த மருதடி பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மருத்துவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த மருத்துவர் பருத்தித்துறை ஆதார 15

## சாந்தனை இலங்கைக்கு அழைத்துவர தேவையான நடவடிக்கை முன்னெடுப்பு

### டக்ளஸின் கோரிக்கையையடுத்து அமைச்சரவையில் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுதலையானவர்களுள் ஒருவரான சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளார்.

அதற்குத் தேவையான ஏற்பாடுகளை 15

## பன்றி வெடியில் சிக்குண்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

பன்றிக்காக வைத்த வெடியில் சிக்குண்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மணவாளன் பட்ட முறிப்புப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில்அதே பகுதி 15

## நாளை பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பம்

(கொழும்பு)

புதிய பாராளுமன்ற கூட்டத் தொடர் நாளை 7ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மிகக் குறைந்த செலவில் எளிமையாகவும், நேர்த்தியாகவும் பாராளுமன்றக் கூட்டத் தொடரின் ஆரம்ப விழாவை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் மரியாதை அணிவகுப்பு, மரியாதை காட்சிகள், ஊர்வலங்கள், பாதுகாப்புப் பணியாளர்கள் வரிசையில் நிற்பது போன்ற எந்த அம்சங்களும் இடம்பெறாது என 15

## மாடியில் இருந்து கீழே விழுந்த தொழிலாளி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டு வேலையில் ஈடுபட்டிருந்த மேசன் தொழிலாளி ஒருவர் மாடியில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

பெரியவிளான், இளவாலையைச் சேர்ந்த சூசை சுதர்சன் (வயது-38) 02

## தலைகீழாகக் கட்டித்தூக்கி அடித்துச் சித்திரவதை

### வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறையில் வைத்து, பொலிஸார் தன்னை தலைகீழாகக் கட்டித் தூக்கி, அடித்து சித்திரவதைக்கு உள்ளாகினர் என மனித உரிமை ஆணைக்குழுவில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் முறைப்பாடு செய்துள்ளார்.

மனிதவுரிமை 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாவை பயிரிட்டு ஏற்றுமதி செய்ய அமைச்சரவை அனுமதி

## அமைச்சர் டயானா கமகே

(கொழும்பு)

மருத்துவ குணம் கொண்ட கஞ்சாவை பயிரிட்டு ஏற்றுமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

இதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைக்கும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் இலங்கை முதலீட்டு சபையின் ஊடாக மேற்கொள்ளப்படும் என்றார்.

உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கும் இதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அதற்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள் டொலரில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மரம் முறிந்து வீழ்ந்ததில் அஞ்சல் அதிபர் உயிரிழப்பு

தம்புள்ளை - சிசிரவத்தை பகுதியில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் தம்புள்ளை சிசிரவத்தை பகுதியைச் சேர்ந்த 73 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மரத்தை சிலர் வெட்டிக் கொண்டிருந்த போது, மரத்தின் கீழ் நின்றவரே உயிரிழந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தின் பின்னர், அவர் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)



யாழ்ப்பாணம் - கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப பீடம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. (ம-7)




## மாடியில் இரு...

என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கொக்குவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இரண்டாம் மாடியில் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் பலகை அடிக்கும் போது பலகை விழும்போது பலகையை குனிந்து பிடிக்க முற்பட்ட தொழிலாளி கீழே விழுந்துள்ளார்.

உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)

## தலை கீழாகக்...

ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில், கருணாகரன் நிதர்சன் எனும் மாணவன் திங்கட்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவிக்கையில்,

"வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் என்னை வழிமறித்து, தான் மறிக்கும் போது ஏன் மோட்டார் சைக்கிளை நிறுத்தவில்லை என என்னுடன் முரண்பட்டார்.

அதற்கு நான் நீங்கள் மறித்ததை கவனிக்கவில்லை. எனக் கூறினேன். அதன்பின்னர் ஆவணங்களை கேட்டார். ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளன எனக்கூறி? அவற்றை எடுத்து கொடுத்த போது, அதனை வாங்கி பார்க்காது, மேலதிக பொலிஸாரை அவ்விடத்திற்கு வரவழைத்தார்.

அதன் போது, சிவில் உடையில் வந்த 7க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி என்னை வீதியில் வைத்து கடுமையாக தாக்கினார்கள். என்னை தாக்கும் சம்பவம் அருகில் உள்ள கடையில் கண்காணிப்பு கமராக்களில் கூட பதிவாகியுள்ளது. அத்துடன் நானும் எனது கைபேசியில் என்னை தாக்குவதனை காணொளி எடுத்தேன்.

பின்னர் என்னை பொலிஸ் வாகனத்தில் ஏற்றி சென்று, பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறைக்குள் அழைத்து சென்று என்னுடைய ஆவணங்கள், மற்றும் கைபேசி என்பவற்றை பறித்தார்கள்.

கைபேசியின் இரகசிய குறியீட்டை கேட்ட போது, அதனை தர முடியாது என மறுத்த போது, என் கால்களை பிடித்து தலைகீழாக தூக்கி கடுமையாக தாக்கினார்கள்.

என் ஆணுறுப்பை குறிவைத்தும் கடுமையாக தாக்கினார்கள். இதனால் எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. வியர்க்க தொடங்கியது. அதனையடுத்து என்னை அறையில் இருந்து, வெளியே அழைத்து வந்து கதிரையில் அமர வைத்து விட்டு சென்று விட்டார்கள்.

பின்னர் நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி வந்தேன். என்னை பொலிஸாரின் இரகசிய அறைக்குள் அழைத்து சென்றதனை, பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் ஞாயிற்றுக்கிழமை (04) தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவர் கண்டார்கள்.

அறைக்குள் வைத்து, அடிக்கும் போது, நான் எழுப்பிய அவலக்குரல் அவர்களுக்கும் கேட்டு இருக்கும். அடித்த பின்னர் என்னை கைத்தாங்கலாக பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அழைத்து வந்து கதிரையில் அமர வைத்ததையும் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவரும் நேரில் கண்டார்கள்.

எவ்வித குற்றமும் இழைக்காத என்னை சிவில் உடை தரித்த பொலிஸார் மூர்க்கத்தனமாகத் தாக்கி சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளனர். என்னை கொலை செய்யும் நோக்குடன் என் ஆணுறுப்பை குறித்து வைத்தும் தாக்கினார்கள்.

இந்நிலையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளமையால் மனித வுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளேன்" என தெரிவித்துள்ளார். (ம-7,33)

## 14 மாத பெண்...

ரகுராம் சாந்திரா என்ற 14 மாதக் குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த இரு நாட்களாக காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் பின்னர் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற் கூற்று பரிசோதனையில் நிமோனியாக் காய்ச்சல் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## அநுரவை...

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்துள்ளார்.

இது குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது மேலும் இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் முன்னோக்கி செல்லும் பாதை குறித்து கலந்துரையாடியதாக ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பினை ஏற்று நேற்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, அந்த கட்சியின் செயலாளர் வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் உள்ளிட்டோர் இந்த விஜயத்தில் கலந்து கொண்டனர்.

இவ்வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார். தென்னிலங்கையில் முற்போக்கு சக்திகளின் ஆதரவு அவருக்கு அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், அவரை இந்திய மத்திய அரசு அழைத்து பேச்சு நடத்துகின்றமை இலங்கை அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

இதேவேளை இந்திய அரசாங்கத்தின் சில பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினருக்கும் இடையில் உத்தியோகபூர்வமான சந்திப்புகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை நாங்கள் பொறுப்பேற்காவிட்டால் லிபியாவின் நிலைக்கு தள்ளப்பட்டிருப்போம்

(கொழும்பு)

**நாட்டை நாங்கள் பொறுப்பேற்றிருக்காமல் விட்டிருந்தால், லிபியா போன்ற நிலைமைக்கு நாடு சென்று இருக்கும் என நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினம் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 4 வருட காலத்துக்குள் கொவிட் தொற்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம், பொருளாதாரம் மற்றும் அரசியல் பிரச்சினை போன்ற விடயங்கள் காரணமாக ஏற்பட்ட நிலைமைகளினால் இந்த நாடு அராஜகமானது.

அன்று இந்த நாட்டை பொறுப் பேற்கும் சவாலை யாரும் ஏற்றுக் கொள்ளாத சந்தர்ப்பத்திலேயே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட நாங்கள் அராஜகமாகிய நாட்டை பொறுப்பேற்றோம்.

தற்போதைய ஜனாதிபதியின் தலைமையின் கீழ் சுமார் 18 மாதங்களுக்குள் பொருளாதார மேம்பாட்டை நோக்கி இந்த நாட்டை கொண்டுவந்திருக்கிறோம் எனத் தெரிவித்தார். (5-6)



# ஜெய்சங்கரை சந்தித்த அநுர



(டில்லி)

இந்திய மத்திய அரசின் அழைப்பையேற்று புதுடில்லி சென்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த சந்திப்பில், இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (5-6)

# ஒரு ஹெக்டேயருக்கு ரூ.15 ஆயிரம்

## விவசாய அமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் பெரும்போக நெற் பயிர் செய்கைக்கான உரக் கொள்வனவு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக விவசாயிகளின் கணக்குகளில் 9.6 பில்லியன் ரூபாய் வரவுவைக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு ஹெக்டேயருக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மேலும் 450 மில்லியன் ரூபாவைநேற்று விவசாயிகளின் கணக்குகளில் வரவு வைக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (5-6)

# ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு பெரமுன ஆதரவு வழங்காது

## சாகர காரியவசம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்க மாட்டாது என ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி பெஜெட் வீதியிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே செயலாளர் நாயகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில், சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மேலதிகமாக, அக்கட்சியிலிருந்து பிரிந்த பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அமைச்சர் திரான் அலஸ் தலைமையிலான கட்சியின் உறுப்பினர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அச் சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வீர்கள் என ஜனாதிபதியிடம் வினவப்பட்டதாக தெரிவித்த சாகர காரியவசம், மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்வரும்



ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கலந்துரையாட வேண்டுமாயின் அது தொடர்பில் சர்வகட்சிமாநாட்டை அழைக்காமல் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களுடன் தனியாக கலந்துரையாடப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார். (5-6)

# செய்தித்துளிகள்

## ஜனவரியில் மட்டும் 2 லட்சம் பயணிகள் வருகை

(கொழும்பு)

தற்போது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தை கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 208,253 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தியாவிலிருந்து 34,399 பேரும், ரஸ்யாவிலிருந்து 16,665 பேரும், ஜேர்மனியிலிருந்து 13,593 பேரும், சீனாவிலிருந்து 11,511 பேரும் குறித்த காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (5-6)

## மேலும் 667 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், நேற்று அதிகாலை 12.30 உடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 667 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 559 பேரும்,குற்றப்பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 108 பேரும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 3 பேர் புனர்வாழ்வு மையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.இந்த சுற்றிவளைப்புகளின் போது 191 கிராம் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஐஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (5-6)

## கொலைக் குற்றத்தில் மேலும் ஒருவர் கைது

(கொழும்பு)

பெலியத்தை பகுதியில் கடந்த மாதம் 22 ஆம் திகதி 5 பேர் சுட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கொலை சம்பவத்துக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைதாகியுள்ளார்.

ஹபராதுவை பகுதியில் வைத்து மாத்தறை வலய சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் அதிகாரிகளால் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதானவர் ரத்கம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகக் கோப்பை கால்பந்தின் இறுதிப்போட்டி நியூயோர்க்கில்

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பிபா நடத்தும் உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடைபெறும். அதன்படி 2026 ஆம் ஆண்டு அடுத்த உலகக் கோப்பை தொடர் நடைபெற இருக்கிறது. இந்த உலகக் கோப்பையை அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய மூன்று நாடுகள் நடத்துகின்றன.

இந்த நிலையில் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள நியூஜெர்சியில் இறுதிப் போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டியை நடத்த நியூயோர்க், டெக்சாஸ் மாநிலம் இடையே கடும் போட்டி நிலவியது. இறுதியில் நியூயார்க் போட்டியை நடத்தும் வாய்ப்பை பெற்றுள்ளது. இந்த தொடரில் 48 அணிகள் பங்கேற்கின்றன.

மெக்சிகோவில் ஜுன் 11 ஆம் திகதி உலகக் கோப்பை தொடர் தொடங்கி, ஜுலை 19 ஆம் திகதி நியூயோர்க்கில் முடிவடைகிறது. மொத்தம் 16 நகரங்களில் போட்டி நடத்தப்படுகிறது. (5-6)




# 8 விக்கெட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆஸி அணி

வெஸ்ட் இண்டீஸ்- ஆவஸ்திரேலியா அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் மெல்போர்னில் நடந்த முதலாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி சிட்னியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது.

அதன்படி முதலில் பட்டிங் செய்த அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 258 ரன்கள் அடித்தது. அந்த அணியில் அதிகபட்சமாக சீன் அப்போட் 69 ரன்கள் அடித்தார். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக குடகேஷ் மோட்டி 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 259 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் பட்ஸ்மேன்கள் அஸ்திரேலியாவின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவில் ஆட்டமிழந்தனர். 43.3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த வெஸ்ட் இண்டீஸ் 175 ரன்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.


இதன் மூலம், அஸ்திரேலியா 83 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வெஸ்ட் இண்டீஸ் அணியில் அதிகபட்சமாக கீசி கார்ட்டி 40 ரன்கள் அடித்தார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை அவுஸ்திரேலியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. (5-6)



# ரன் அவுட்டை தவறவிட்ட ஆஸி. வீரர் எல்லோரும் டோனியாக முடியாது

## ரசிகர்கள் கருத்துப்பதிவு




எளிதான ரன்அவுட்டை தவறவிட்டதற்காக அவுஸ்திரேலிய விக்கெட் கீப்பரை "எல்லோரும் டோனியாக முடியாது" என ரசிகர்கள் கூறிவருகின்றனர்.

அவுஸ்திரேலிய விக்கெட் கீப்பர் ஜோஷ் இங்கிலிஸ் எளிதான ரன் அவுட்டை தவறவிட்டார்.

மெல்போர்ன் மைதானத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ஜோஷ் இங்கிலிஸ் தனது வேகமான ஆட்டத்தால் அணியை ஆச்சரியப்படுத்தினார்.

ஆனால், பந்துவீச்சின்போது எளிதான ரன் அவுட்டை தவறவிட்டு அதிர்ச்சியளித்தார்.

47 ஆவது ஓவரில் டீப் கவர்களில் ஷாட் அடித்தார். ஃபீல்டர் பவுண்டரிக்கு செல்லும் பந்தை நிறுத்தி நேராக இங்கிலிஸை நோக்கி வீசினார்.

ஏற்கனவே இரண்டு ஓட்டங்களை முடித்திருந்த நிலையில், மோதி மூன்றாவது ஓட்டம் எடுக்க பாதி கிரீஸை கடந்தார்.

இங்கிலிஸ் கைக்கு வந்ததை பார்த்ததும், கிரீஸை நோக்கி வேகமாக ஓடினார். ஆனால், இங்கிலிஸ் அந்த பந்தை ஸ்டம்ப்பில் அடிக்க தவறிவிட்டார்.

இந்த காணொளி தற்போது வைரலாகி வருகிறது. குறித்த பதிவை பார்த்த அனைவரும் "எல்லோரும் மகேந்திர சிங் டோனி ஆக முடியாது" என கமெண்ட் செய்ய தொடங்கியதில் இரசிகர்களிடையே வைரலாகியுள்ளது. (5-6)

# விமர்சனங்களுக்கு பதிலடியாக சதம் அடித்து அசத்திய கில்



இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.

டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து சொதப்பி வரும் சுப்மன் கில்லை ரஞ்சி போட்டியில் விளையாட சொல்ல வேண்டும் என தொடர்ந்து விமர்சனம் வைக்கப்பட்டது.

இந்த விமர்சனத்திற்கு சுப்மன் கில் முற்றுப் புள்ளி வைத்துள்ளார். 3 ஆவது போட்டியில் சதம் அடித்து தனது பார்மை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

இந்திய டெஸ்ட் அணியில் 3 ஆவது நபராக களம் இறங்கும் பட்ஸ்மேன் இந்திய மண்ணில் சதம் அடித்து ஏழு வருடங்கள் ஆகிறது. புஜாரா கடந்த 2017 ஆம் ஆண்டு சதம் அடித்திருந்தார். அதன்பின் 3 ஆவது வீரராக களம் இறங்கிய வீரர்கள் இந்திய மண்ணில் சதம் அடித்தது கிடையாது. தற்போது சுப்மன் கில் சதம் அடித்து ஏழு ஆண்டு காத்திருப்பை பூர்த்தி செய்துள்ளார்.

விசாகப்பட்டினம் டெஸ்டில் டாஸ் வென்று பட்டிங் தேர்வு செய்த இந்தியா முதல் இன்னிங்சில் 396 ரன்கள் குவித்தது. பின்னர் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 255 ரன்னில் சுருண்டது.

இந்தியா 2 ஆவது இன்னிங்சில் 253 ரன்னில் ஓல்அவுட் ஆக, இங்கிலாந்து அணிக்கு 399 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 - 09 - 1947



மறைவு
05 - 02 - 2024

## திருமதி. யோகலிங்கம் சரஸ்வதி (அன்னக்கிளி)

யாழ்ப்பாணம் மாதகலை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, குஞ்சுப் பரந்தன், உதயநகர் மேற்கு கிளிநொச்சி,கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.யோகலிங்கம் சரஸ்வதி(அன்னக்கிளி) அவர்கள் நேற்று 05.02.2024 திங்கட்கிழமை அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் வேலுப்பிள்ளை யோகலிங்கம் அவர்களின் அன்பு துணைவியாரும் காலஞ்சென்ற திருமதி.கந்தசாமி-பரமேஸ்வரி, சிவபாலசுப்பிரமணியம்(சட்டத்தரணி-கிளிநொச்சி), சிங்கராசா(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,

சிவா(அமெரிக்கா), சிவகலாநிதி(கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலயம்) சிவரஞ்சினி(அமெரிக்கா), சிவமதி(சுவிஸ்), சிவயோகச்செல்வன் (இலண்டன்), சிவசத்தியசீலன்(கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும் சிறீபிரபாகரன்(இலண்டன்), சண்முகப்பிரியா(கனடா), கல்யாணி(மாதகல்) ஆகியோரின் பெரிய தாயாரும், ரேணுகா(அமெரிக்கா), மார்க்கண்டு(தேவன்-கொழும்பு), ஜோன்சன் (அமெரிக்கா), திரவியநாதன்(சுவிஸ்), நிலானி(இலண்டன்), அருள்மொழி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாரங்கா, Dr.கீதாஞ்சன், கோபிதன், துவாரகன், துவாரகா(அமெரிக்கா), திலக்சன், கிஷாந்தி, திவ்யன்(சுவிஸ்), சஜீவனா, லோஜினா, சஞ்சிதன், கிர்ஷிகா(இலண்டன்), அனுஷா, லனுஷா, அனுஷன், பிரவீன், கவினயா(கனடா), சங்கீதா, டனுஷிகா, நிஷாந்தன்(மாதகல்) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 07.02.2024 (புதன்கிழமை) காலை 10 மணிக்கு திருப்புகழ் மண்டப வீதி, சாவகச்சேரி வடக்கு,சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(சி-8284)

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# அமைச்சரவையிலிருந்து கெஹலியவை நீக்குமாறு கோரிக்கை

## மருத்துவ தொழிற்சங்க ஒன்றியம்

(கொழும்பு)

சுற்றாடல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை அமைச்சரவையிலிருந்து நீக்குமாறு மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவ தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் சமால் சஞ்சீவ கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச நிதியை துஸ்பிரயோகம் செய்தமை உள்ளிட சில குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கெஹலிய அமைச்சரவையில் நீடிக்கப்பட கூடாது என வலியுறுத்தியுள்ளார்.

கெஹலிய அமைச்சரவையில் தொடர்ந்தும் நீடித்தால் அது எதிர்கால விசாரணைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

மேலும், கெஹலிய தொடர்ந்தும் அமைச்சரவையில் அங்கம் வகித்தால் சர்வதேச ரீதியில் இலங்கை அமைச்சரவைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் என நிபுணத்துவ மருத்துவர் சமால் சஞ்சீவ தெரிவித்துள்ளார். (5-6)

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்றத்தில் கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார். சபாநாயகரின் நடத்தை மற்றும் ஆன்லைன் பாதுகாப்பு மசோதாவை நிறை வேற்றுவது குறித்த கவலைகளுக்கு மத்தியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் பீரிஸ், ஆன்லைன் பாதுகாப்பு சட்டமூலம் சரியான சட்ட நடைமுறைகளை கடைபிடிக்கவில்லை என்று அதிருப்தி தெரிவித்தார். சபாநாயகரின் நடத்தையை மேலும் விமர்சித்த அவர், இது "அவமானமானது" என்றும், சில சட்டங்களை நிறைவேற்றும் போது அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை மீறியதாக குற்றம் சாட்டினார்.(5-6)

# இடிந்து வீழ்ந்த பாலம்

## தடைப்பட்ட போக்குவரத்து



(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய நகரிலிருந்து தொரகொலயா ஊடாக மித்தெனிய செல்லும் பிரதான வீதியில் ஹ"லந்த ஓயா பாலம் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தி நேற்று காலை பாலத்தின் ஊடாகச் சென்று கொண்டிருந்த போது குறித்த பாலம் இடிந்து வீழ்ந்துள்ளதுடன் பாரவூர்த்தி ஓடையில் விழுந்துள்ளது.

இந்நிலையில் பாலம் இடிந்து வீழ்ந்தமையினால் எம்பிலிப்பிட்டியவில் இருந்து மாத்தறை, பெலியத்த, தங்காலை பாதையில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.(5-6)

# இராசிபலன்

06.02.2024
தை 23, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 12.36 மணிவரை
மூலம் பின்னிரவு 3.46 மணிவரை

சுபநேரம் -11.05-12.35 மணிவரை
இராகுகாலம்-3.35-5.05 மணிவரை
ஏகாதசி விரதம்,அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்
கார்த்திகை.

வளவன்

**மேஷம்**
வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**இடபம்**
உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்,குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்,ரோக பயமுண்டு, முயற்சிகள் தாமதமாகும்.

**மிதுனம்**
ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள் நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், விருந்தினர்கள் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்**
பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், கௌரவமான நாள்.

**சிம்மம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம்,தாழ்ந்த சுபாவமுண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**கன்னி**
இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**
உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்,சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**
நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும், அனைத்திலும் வெற்றி பெற கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு**
சோம்பலை விலக்குவது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்**
வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

படித்துப் பெறுவது கல்வி, படிக்காமல் பெறுவது அனுபவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு கூட்டம்

## சுசில் பிரேமஜயந்த பங்கேற்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு கூட்டம், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் பங்கேற்புடன், யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.



வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பிலேயே குறித்த கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

அந்தவகையில், கடந்த ஐந்து வருடங்களில் மாவட்ட மாணவர்கள், தரம் ஐந்து, சாதாரண மற்றும் உயர் தரங்களில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ். மாவட்டத்தில் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

எனினும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களின் கல்வி நிலை தொடர்பில் அதிக கரிசனை செலுத்த வேண்டியுள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் கல்வித்துறையில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன விடயங்களை தெளிவுப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில்,வடமாகாண ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன், மத்திய அமைச்சின் உயர் அதிகாரிகள், மாகாண அமைச்சின் அதிகாரிகள், கல்வித்துறைசார் உத்தியோகஸ்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-6-33)

# 23 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நெடுந்தீவு கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை 23 மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதோடு மீனவர்களின் 2 படகுகளும் இதன்போது கைப்பற்றப்பட்டன.

மீனவர்கள் நேற்று முன்தினம் காலை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டதாக கடற்படை தெரிவித்தது.

பின்னர் 23 மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதாக யாழ்.மாவட்ட நீரியல்வள திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச் சாட்டில் 46 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 8 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-33-60)

# கடத்திச் செல்ல முற்பட்ட 3 ஆடுகள் பொலிஸாரால் மீட்பு

(கரணவாய்)

வடிவாகனத்தில் 3 ஆடுகளை கடத்திச் செல்ல முற்பட்ட சந்தேகநபரொருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சிப் பகுதியில் அடிக்கடி கால்நடைகள் திருட்டுப் போவதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய நேற்று முன்தினம் காலை பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சந்தேகநபராருவரை கைது செய்ததோடு 3 ஆடுகள் மற்றும் வடிவாகனம் ஒன்றையும் மீட்டுள்ளனர். (5-6-60)

# சிறைச்சாலையில் இடம்பெற்ற இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளை ஆகியவற்றுடன் இணைந்து கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலையின் அனுசரணையுடன் முன்னெடுத்த மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்றது.


யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் 60 மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3033

### விதுர்சிகா




### யுவாரகா




### சாரங்கன்




### நிதர்சன்




### வாகினி




### கவியரசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாவதால்

# குழந்தைப் புற்று நோயாளர்கள் எண்ணிக்கை 900 ஆக உயர்வு

## மருத்துவர் தீபால் பெரேரா



**(கொழும்பு)**

**இலங்கையில் குழந்தைப் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை 900 ஆக உயர்ந்துள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை இதற்கு முன்னர் 450 ஆக இருந்த நிலையில் ஒரு வருடத்தில் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகுவதால் ஏற்படும் உடல் சோர்வு, புற்றுநோய் உள்ளிட்ட தொற்று நோய்கள் அதிகரிப்பதற்கு ஒரு காரணம் எனவும் வைத்தியர் எச்சரித்துள்ளார்.

இன்று சிறுவர்களுக்கு மத்தியில் இரத்தப்புற்றுநோய், மூளைப்புற்றுநோய் போன்ற நோய்கள் வெகுவாக அதிகரித்துள்ளது.

நோய்களில் இருந்து விடுபட குழந்தைகளை இனிப்பு பானங்கள் மற்றும் சிற்றூண்டிகளில் இருந்து விலக்கி வைப்பது முக்கியம் என்றும் குறிப்பாக குழந்தைகளுக்கு இரண்டு வருடங்கள் தாய்ப்பால் கொடுப்பது புற்றுநோயில் இருந்து விடுபட நல்ல வழி என்றும் குறிப்பிட்டுள்ளார். (5-6)


**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**உப அலுவலகம், கோப்பாய்.**
**ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்**

யாழ்.வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 12, டச்சு வீதியில், 17 என்னும் வரி ம்திப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம், சொந்தக்காரர் உ.கோ: நடராசா நவரத்தினம் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.
இவ் ஆதனமானது 2023.10.30 ஆம் திகதிய பத்திரிகையில் வட்டாரம் - 14 என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.
தற்போது இவ்வாதனத்தை சுந்தரம்பிள்ளை படிகைவேந்தன் தனது பெயரிற்கு எமது ஆதனப்பதிவேட்டில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களிற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறும், யாரேனும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுந்தரம்பிள்ளை படிகைவேந்தன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

(18897)


# நிகர எடைக்கு ஏற்ப பாண் விற்காதவர்களுக்கு சட்ட நடவடிக்கை

## நுகர்வோர் அதிகாரசபை

(கொழும்பு)

பாண் எடையை குறிப்பிடும் வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க பாண் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை கண்டறிய நேற்று நாடு முழுவதும் சுற்றிவளைப்புக்களை நுகர்வோர் அதிகாரசபை முன்னெடுத்துள்ளது.

அதன்படி, ஒரு இறாத்தல் பாணின் பரிந்துரைக்கப்பட்ட எடை 450 கிராமாக இருக்க வேண்டும் என்றும் அதன் மாறுபாடு 13.5 கிராமிற்கு குறையாமல் இருக்க வேண்டும் என குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பாண் விற்பனை செய்யாத வர்த்தகர்களுக்கு எதிராக குறித்த சுற்றி வளைப்புகளின் போது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (5-6)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.சுதர்சினி அமிர்தரஞ்சன்



திருமதி.கவிதா அரவிந்தன்



திரு.சின்னராசா சிவேந்திரன்

பாடசாலை நிறுவுநர் தினமான இன்று எமது பாடசாலையில் கல்வி கற்பித்து வருகின்ற ஆசிரியர்களான திருமதி.கவிதா அரவிந்தன், திருமதி.சுதர்சினி அமிர்தரஞ்சன்,திரு.சின்னராசா சிவேந்திரன் ஆகியோர் கடந்த 30,31.01.2024 ஆகிய தினங்களில் கொழும்பு பண்டாரநயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் (BMICH) கல்விமாணி (B.Ed) பட்டம் பெற்றுள்ளனர்.
அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
யா/பெரியபுலம் மகா



**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்**
**மாணவர் அனுமதி -2024**

- 2024 கல்வியாண்டிற்கு தரம்6, தரம்10, தரம்12 (A/L2025) ஆகிய தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- முடிவுத் திகதி - **12.02.2024**

(C-8283) **அதிபர்**




**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

உடுவில் பிரதேசத்தில் குறிப்பிட்ட தொகை பணம் கிடைக்கப்பெற்றுள்ளது. பணத்தின் உரிமையாளர் பணத்தை தொலைத்த திகதி, பணத்தின் தொகை, பயணித்த பாதை என்பவற்றை **075 316 8710** எனும் இலக்கத்துக்கு தொடர்புகொண்டு சரியான விபரங்களை கூறி பெற்றுக்கொள்ளலாம். (18894)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இராணுவத்தினரை மாலைதீவிலிருந்து வெளியேற்ற ஒப்புக்கொண்ட இந்தியா



(டில்லி)

இந்தியாவுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் முடிவில் மாலைதீவில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்ற இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.

மேலும், மே மாதத்திற்குள் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என மாலைதீவின் வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா-மாலைதீவுகள் இடையே 2 வாரங்களாக நடைபெற்று வரும் இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை டில்லியில் நிறைவடைந்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக முகமது முய்சு பதவியேற்றதன் பின்னர், இந்தியாவிற்கும் மாலைதீவுக்குமிடையிலான பிரச்சினை ஆரம்பமாகியது.

முகமது முய்சு தேர்தல் வாக்குறுதியாக இந்திய இராணுவத்தை வெளியேற்றுவோம் என்று வாக்குறுதி அளித்திருந்தார். பதவியேற்றதன் பின்னர் இந்திய இராணுவத்தை நாட்டில் இருந்து வெளியேற்றுவோம் என்று முடிவில் உறுதியாக உள்ளார்.

அண்டை நாடுகளான இந்தியாவும் சீனாவும், மாலைதீவை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க, கடும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில், முகமது முய்சு ஜனாதிபதியானதன் பின்னர் இந்தியா உடனான உறவில் விரிசல் ஏற்பட்டது.

முகமது முய்சு முதல் அரச பயணமாக சீனாவுக்கு சென்றதுடன் எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதிக்குள் இந்திய இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்ற கெடுவும் விதித்தார்.

தற்போது மாலைதீவு மற்றும் இந்தியா இந்த விவகாரம் தொடர்பில் முன்னெடுத்த பேச்சுவார்த் தையின் முடிவில் மார்ச் 10 ஆம் திகதி முதற்கட்டமாக இராணுவத்தினரின் ஒரு பகுதி வெளியேறும் என்றும் மே மாதம் 10 ஆம் திகதி எஞ்சிய இராணுவத்தினர் வெளியேறுவார்கள் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## சிலி வனப்பகுதி தீயால் 112 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க நாடான சிலியில் ஏற்பட்டுள்ள பயங்கர காட்டுத்தீயால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 112 ஆக அதிகரித்துள்ளதோடு சுமார் 20 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

தென் அமெரிக்க நாடான சிலியின் வினாடெல்மார் மலைப்பகுதியில் பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டது. இந்த தீ மளமளவென மற்ற பகுதிகளுக்கும் வேகமாக பரவியதால் இதுவரை சுமார் 20 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளதோடு இதனால் அங்குள்ள அரிய வகை தாவரங்கள், விலங்கினங்கள் தீயில் கருகியுள்ளன. அதனை சுற்றியுள்ள எஸ்ட்ரெல்லா, நவிடாப் ஆகிய பகுதிகளுக்கும் இந்த தீ பரவியது.

இதில் அங்குள்ள 1,200 வீடுகள் எரிந்து நாசமாகின. இந்தநிலையில் சிலியில் எரியும் காட்டுத் தீயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது.

வேகமாக பரவி வரும் இந்தத் தீயை அணைப்பது சவாலாக உள்ளது. இந்த காட்டுத்தீ காரணமாக இனிவரும் நாட்களில் வெப்பநிலை 104 டிகிரி வரை அதிகரிக்கும் என வானிலை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (5-6)

## மக்களின் உயிர்களை காப்பதும் சுதந்திரத்தை பாதுகாப்பதும் நமது கடமை
## பிரதமர் ரிஷிசுனக்

(லண்டன்)

ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் மீது பிரிட்டன் விமானப்படை தாக்குதல் நடத்தி கிளர்ச்சியாளர்களின் நிலைகளை மேலும் சிதைத்தாக பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

ஹவுதிக் கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்காவுடன் இணைந்து பிரித்தானியாவும் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு பிரித்தானியா விமானப்படை ஹவுதியின் இலக்குகளை தாக்கியுள்ளது.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பிரதமர் ரிஷி சுனக் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்து இருப்பதாவது.

நேற்று முன்தினம் இரவு பிரிட்டன் விமானப்படை விமானங்கள், ஏமனில் உள்ள குறிப்பிட்ட ஹவுதி இராணுவ இலக்குகளை வெற்றிகரமாக தாக்கி ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நிலைகளை மேலும் சிதைத்து பிரிட்டன் மற்றும் சர்வதேச கப்பல்கள் மீதான சமீபத்திய தாக்குதல்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. அப்பாவி உயிர்களைப் பாதுகாப்பதும் சுதந்திரத்தை பாதுகாப்பதும் நமது கடமை என்று தெரிவித்துள்ளார். (5-6)



## தாக்குத
## அமெரி
### ஹவுதி கி

(ஏமன்)

ஏமனில் ஹவுதிகளி
மற்றும் பிரித்தானி
தலானது கடுமையா
ஹவுதி கிளர்ச்சியா
ளனர்.



## லெபனான் ஹிஸ்
## போர் தொடுக்க

(ஜெருசலேம்)

லெபனானிலிருந்து செயற்பட்டு வரும் ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவினர் மீது போர் தொடுக்கத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

ஹமாஸுக்கு ஆதரவளித்து லெபனானில் செயற்பட்டு வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவினர் இஸ்ரேலின் வடக்கு எல்லை மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கட்டார், எகிப்து உள்ளிட்ட நாடுகளின் முன்னெடுப்பால் ஹமாஸ்-இஸ்ரேல் இடையே போர் நிறுத்தத்தை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.


இந்நிலையில் ஈரான் ஆதரவு பெற்ற பிற ஆயுதக் குழுக்களுடனான போரை இஸ்ரேல் ஆரம்பிக்கலாம் என பதற்றம் உருவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தல் நடத்தியமைக்கான விளைவுகளை

# ரிக்கா, பிரித்தானியா சந்திக்கும்

## கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை



**களின் 36 இலக்குகளின் மீது அமெரிக்கா தானியா இணைந்து நடத்திய தாக்கு யான விளைவுகளை ஏற்படுத்தும் என யாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்**



இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேலுக்கும், ஹமாஸ் ஆயுதக் குழுவுக்கும் இடையேயான போர் 3 மாதங்களுக்கும் மேலாக நீடித்து வருகிறது.

இந்த போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு ஏமனில் செயற்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழு ஆதரவு அளித்து வருகிறது.

மேலும், செங்கடல் வழியாக இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலின் ஆதரவு நாடுகளுக்கு செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக, ஏமனில் உள்ள ஹ்வுதி கிளர்ச்சியாளர்களின் நிலைகளை குறிவைத்து அமெரிக்கா மற்றும் பிரித்தானியா வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து ஹவுதிகளின் 36 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

குறித்த தாக்குதலில் ஹவுதிகளின் ஆயுதங்கள் சேமிப்பு கிடங்குகள், ஏவுகணை அமைப்புகள், ஏவுகணைகள் மற்றும் செங்கடல் வழியே பயணிக்கும் கப்பல் மீது தாக்குதல் நடத்த ஹவுதிகள் பயன்படுத்திய பிற ஆயுதங்களையும் அழிந்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஹவுதிகளின் செய்தித்தொடர்பாளர் Yahya Sarea தெரிவிக்கையில், அமெரிக்கா மற்றும் பிரித்தானியா முன்னெடுத்துள்ள இந்த தாக்குதலானது, கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உறுதி என எச்சரித்துள்ளார்.

ஜோர்தானில் அமெரிக்க துருப்புகள் மீது ட்ரோன் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதில் மூவர் பலியானதை தொடர்ந்து அதற்கு பதிலடியாக ஹவுதிகளின் இலக்குகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை சிரியா மற்றும் ஈராக்கில் சுமார் 85 இலக்குகள் மீது முதல் தாக்குதலை அமெரிக்கா முன்னெடுத்தது.

இதில் சுமார் 40 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

---

# ிஸ்புல்லா ஆயுதக்குழு மீது க்கத் தயாரான இஸ்ரேல்



இது தொடர்பில் இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி தெரிவிக்கையில், "ஹிஸ்புல்லாக்களுக்கு எதிராக போர் தொடுப்பது எங்களுடைய முதல் தேர்வாக இருக்காது. ஆனால், எதற்கும் தயாராக உள்ளோம். லெபனான், சிரியா என எவ்வளவு தொலைவில் அவர்கள் இருந்தாலும், அர்களுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்" எனத் தெரிவித்துள்ளார். (5-6)

---

# ரஷ்யா ஆக்கிரமித்து வைத்திருந்த உக்ரைனிய நகரில் தாக்குதல்

## 28 பேர் உயிரிழப்பு

(கீவ்)

ரஷ்யா ஆக்கிரமித்துள்ள உக்ரைனிய நகரமான லிசிசான்ஸ்க்கில் நடத்தப்பட்ட தாக்குதலில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைன் - ரஷ்யா போரானது முடிவில்லாமல் தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றது, இதில் இரு தரப்பிலும் இருந்து ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், உக்ரைனில் ரஷ்யா ஆக்கிரமித்து வைத்திருந்த லிசிசான்ஸ்க் நகரத்திலுள்ள வெதுப்பகம் ஒன்றின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



தாக்குதலில், 28 பேர் உயிரிழந்துள்ளதோடு 10 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, குறித்த தாக்குதலை உக்ரைன்தான் நடத்தியுள்ளதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கம் ஜனாதிபதிக்கு இல்லை

(கொழும்பு)

**பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கம் ஜனாதிபதிக்கு கிடையாது. நெருக்கடிகளை தீவிரப்படுத்தி மேற்குலகத்தை மகிழ்விக்க முயற்சிக்கிறார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**



கடுவலை பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்காகவே ராஜபக்ஷர்கள் உட்பட பொதுஜன பெரமுனவினர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கினார்கள். பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை அதளபாதாளத்துக்குள் தள்ளும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. மன்னார் காற்றாலையின் பெரும்பாலான பங்கு இந்தியாவின் அதானி நிறுவனத்திடம் உள்ளது. இலங்கையின் சக்தி வலுவின் சுயாதீனத்தை இந்தியா வெகு விரைவில் ஆக்கிரமிக்கும்.

இலாபமடையும் ரெனிகொம் நிறுவனத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வெறுக்கத்தக்கது. நெருக்கடிகளை தீவிரத்தபடுத்தி மேற்குலகத்தை மகிழ்விக்க முயற்சிக்கிறார். ஜனாதிபதியின் செயற்பாடுகள் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார். (5-6)

## தென்னக்கோனின் பதவிக்காலம் குறித்து இன்னும் முடிவு இல்லை

(கொழும்பு)

தேசபந்து தென்னக்கோனின் பதவிக்காலம் இம்மாத இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரது பதவிக்காலம் நீடிக்கப்படுமா என்பது தொடர்பில் இதுவரை உறுதியாகவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் அறிவிப்பிற்காக காத்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நான்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்ட சி.டி. விக்ரமரத்தன ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கடந்த ஆண்டு நவம்பரில் பதில் பொலிஸ் மா அதிபராக கடமையேற்றார்.

தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை அரசியலமைப்பு சபை அங்கீகரித்த போதிலும், 2022 மே 9 அன்று காலி முகத்திடல் போராட்ட தளத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னர் அவருக்கு எதிராக கடுமையான எதிர்ப்புக்கள் அதிகரித்தன.

இதன்படி, அவரது பதவிக்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரி கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட பலர் மனுக்களை தாக்கல் செய்த நிலையில் அவை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு விசாரணைக்கும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## கட்டுப்பாட்டை இழந்த கார் தடம்புரண்டு விபத்து

### திருமலையில் சம்பவம்



(திருமலை)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள மூதூர் மலையடிவாரப் பகுதியிலுள்ள வாய்க்காலுக்குள் கார் ஒன்று தடம் புரண்டு வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த குறித்த கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

எனினும் காரில் பயணித்த எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் என மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)

## இன்று ஒரு தகவல் 28



தென்கச்சி கோசுவாமிநாதன்

## ஞாபகசக்தி

நேற்று வரைக்கும் நம்ம கூடவே இருந்திருப்பான். இன்னைக்கு அவனுக்கு திடீர் என்று பணம், பதவி, புகழ் இந்த மூன்றிலும் ஏதாவது கிடைத்திருக்கும்.

நாளைக்கு அவன் முன்னாடி போய் நில்லுங்க "யார் நீங்க" என்று கேட்பான். பொதுவாக பலரிடம் இருக்கிற இயல்பு இது தான்.

ஞாபக மறதியையும் பெரிய மனிதனுக்கு ஒரு அடையாளமாக சொல்லுறது வழக்கமாக போச்சு!

சிலரிடம் இது இயல்பாகவே இருக்கும். அதை நாம குறையாக சொல்லுவது தப்பு.

அபாரமான ஞாபக சக்தியுள்ள மனிதர்களும் உண்டு, கவிஞர்களும் உண்டு. கவிஞர் பைரன் இருந்தாரல்லவா!

எவ்வளவோ கவிதைகள் எழுதினாராம். அதிலே எதை வேண்டும் என்றாலும் எந்த சமயத்தில கேட்டாலும் ஒரு சின்ன தவறு கூட இல்லாம ஒப்பித்து விடுவாராம்.

ஆனால் வால்டர் ஸ்காட் என்கின்ற கவிஞர் இவரிலிருந்து நேர் விரோதம்.

ஒரு சமயம் பைரன் எழுதிய கவிதை என்று நினைத்து கொண்டு தன்னுடைய சொந்த கவிதையையே பாராட்டிக் கொண்டு இருந்தாராம். அந்த அளவுக்கு ஞாபக மறதி.

அமெரிக்க ஜனாதிபதியா இருந்தாரே தியோடர் ரூஸ்வெல்ட். அவருக்கு ஞாபக சக்தி அதிகம். பல பேரை சந்திக்க வேணும் பேசவேணும் என்று ஆர்வம் உள்ளவராம். அவர் யாரை சந்தித்தாலும் அவருடைய பழக்க வழக்கம், அடையாளம் இதையெல்லாம் நன்றாகக் கவனித்து அவரின் மனதிலே பதிய வைத்திருப்பாராம்.

இது அரசியலிலே அவருக்கு ரொம்ப உதவியா இருந்து இருக்கு. அவர் இரண்டாவதாக யாரையாவது சந்திக்கும் பொழுது அவர்களை மிகவும் முக்கியமான நபர்களை கூப்பிடுவது போல பேர் சொல்லி கூப்பிடுவாராம். அவங்களுக்கு உச்சி குளிர்ந்து போய்விடும்.

ஒரு சமயம் ஜப்பானிய பாங்க் அதிபர் ஒருத்தரை பார்த்து இருக்கார். 15 வருடத்துக்கு முன்னாடி அவர்கள் பேசிக்கொண்டு இருந்த விடயத்தை தொடர்ந்து பேசினாராம் ரூஸ்வெல்ட். அதிபர் அசந்து போனாராம்.

அவருக்கு எப்படி ஞாபக சக்தி வந்தது? அவர் மனதை ஒரு நிலைப்படுத்த நல்லா பழகி இருந்தார். ஒரு தடவை பிரேசிலுக்கு போயிருந்தார். ஒரு மரத்தடியில் உட்கார்ந்து இப்பன் எழுதிய "ரோம் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி" என்கின்ற நூலை படித்து கொண்டு இருந்தார். அதிலேயே லயித்துப் போய்விட்டார்.

கொஞ்ச நேரத்தில் மழை பொழிய ஆரம்பித்து விட்டது. அது கூட தெரியாம அவரு சொட்ட !சொட்ட நனைந்து கொண்டே படித்து கொண்டு இருந்தார். அந்த அளவுக்கு மனதை ஒரு நில படுத்த கூடியவர். அது தான் அவரது ஞாபகசக்திக்கு காரணம்.

சர் பிரான்சிஸ்பேகன் எப்படி தெரியுமா? தன்னுடைய பிரபலமான புத்தகங்களிலே ஒன்றை ஞாபகத்தில் வைத்திருந்து சொல்லியே எழுத வைத்தாராம்.

நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளின் இருந்தாரே அவருக்கு மறதி அதிகம். கார்லைல் ராபின்சன் என்கின்றவர் அவரிடம் அந்தரங்க காரிய தரிசியாக ஏழு வருட காலம் வேலை பார்த்தவர். எப்பொழுதும் சார்ளி சப்ளின் கூடவே இருந்தவர். அவர் அப்படி இருந்தும் அவரது முழுப்பெயர் சார்ளி சப்ளினுக்கு ஞாபகம் இல்லையாம்.

எது எப்படி இருந்தாலும் நம்மை பொறுத்த வரை நாம் ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்வது என்பது மிகவும் நல்லது. மனதை ஒருமுகப்படுத்த பழகிக் கொள்வது தான் அதுக்கு சிறந்த வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிப்பணத்தில் சம்பளம் பெறுவோர் மக்களுக்காக சேவையாற்ற வேண்டும்



(யாழ்ப்பாணம்)

அரச சேவையில் இணைந்துகொள்ளும் அனைவரும் பொதுமக்களுக்காக செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு கூட்டம் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் பங்கேற்புடன் யாழ் மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்றது.


வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்காகவே சேவையாற்ற கடமைப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் மாகாணத்தில் ஆசிரியர், அதிபர்களின் வெற்றிடங்கள் காணப்படும் பகுதிகளுக்கு சென்று சேவை செய்ய வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். (5-6-33)

# புதிய தலைமையை நியமிக்கும் நேரம் வந்துவிட்டது

(கொழும்பு)



வெளிநாட்டில் இருந்து பிரதிநிதிகளை வரவழைத்து பட்டினியால் வாடும் மக்களை நாட்டின் உயரதிகாரிகளுக்கு முன்னால் அவமானப்படுத்துவது சுதந்திரமா, நாட்டை ஒடுக்கும் தலைமையிலிருந்து விடுவித்து புதிய தலைவரை நியமிக்கும் நேரம் வந்து விட்டது என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு பொரளை தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட ஆராதனையில் கலந்து கொண்ட போதே கர்தினால் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் தாக்குதலின் குற்றவாளிகள் இன்றும் அரசியலில் உள்ளனர்.

நாட்டில் சட்டத்திற்கு இடமில்லை அக்கிரமம் இருக்கிறது. இதனை நினைத்து ஒரு நாடாக நாம் வெட்கப்பட வேண்டும். (5-6)

# கெஹலியவை பதவி விலகக்கோரி கோட்டையில் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை உடனடியாக, அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக கையெழுத்து திரட்டும் போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

தரம் குறைந்த இமியுனோகுளோபியுலின் மருந்தை இறக்குமதி செய்த குற்றச்சாட்டு தொடர்பாக கடந்த 2 ஆம் திகதி முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில், சுற்றாடல் துறை அமைச்சுப் பதவியிலிருந்து உடனடியாக கெஹலிய ரம்புக்வெல்லவை நீக்க வேண்டும் என வலியுறுத்தி, நேற்று கையெழுத்து திரட்டும் போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் ஊழல் - மோசடிக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள ஒருவர் தொடர்ந்தும் அமைச்சுப் பதவியில் நீடிக்க இடமளிக்க முடியாது என கையெழுத்து திரட்டும் போராட்டத்தை ஏற்பாடு செய்த சிவில் சமூக அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (5-6)

# எதிர்வரும் தேர்தலில் குடும்ப அரசியல் முடிவிற்கு வரும்-அநுர

(கொழும்பு)


இந்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் குடும்ப அரசியலை முடிவுக்கு கொண்டு வரவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களுக்கு தற்போது இரண்டு பாதைகளே உள்ளன. பழைய வீதியில் சென்று படுகுழியில் விழுந்து புதைந்து போகலாம்.

அவ்வாறு இல்லையென்றால் புதிய பாதையில் சென்று மீண்டெழுந்து கொள்ளலாம். நாம் புதிய மறுமலர்ச்சியை உருவாக்குவது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த காத்திருக்கிறோம். எம்மால் முழு தவற்றை நாம் செய்வோம். எமக்கு முன்னால் உள்ள எதிரிகள் எமக்கு முக்கியம் அல்ல என தெரிவித்தார். (5-6)

# ஆறு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைப்பு - நுகர்வோர் அதிகார சபை



(கொழும்பு)

ஆறு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அதிகபட்ச மொத்த மற்றும் சில்லறை விலைகள் நேற்று குறைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

காய்ந்த மிளகாய் கிலோ 870 ரூபாவாகவும், வெள்ளை சீனி கிலோ 265 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் உளுந்து கிலோ 900 ரூபாவாகவும், பெரிய வெங்காயம் கிலோ 320 ரூபாவாகவும், உருளைக் கிழங்கு கிலோ 120 ரூபாவாகவும், பருப்பு கிலோ ரூ.295 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 400 | 450 | 535 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 | 130 |
| பச்சைமிளகாய் | 1000 | 1100 | 1000 | 1000 | 950 |
| தக்காளி | 800 | 800 | 700 | 1000 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 150 | 120 |
| கோவா | 550 | 500 | 700 | 600 | 500 |
| கரட் | 1500 | 1000 | 1400 | 1200 | 900 |
| பூசணி | 220 | 260 | 180 | 300 | 215 |
| புடோல் | 250 | 300 | 300 | 300 | 200 |
| வாழைக்காய் | 350 | 250 | 200 | 300 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 300 | 400 | 300 |
| பாகற்காய் | 650 | 500 | 600 | 600 | 510 |
| வெண்டக்காய் | 600 | 500 | 200 | 500 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 100 |
| பயற்றங்காய் | 600 | 550 | 500 | 600 | 700 |
| லீக்ஸ் | 460 | 450 | 600 | 800 | 600 |
| பீற்றூட் | 800 | 600 | 600 | 600 | 500 |
| கறிமிளகாய் | 600 | 800 | 800 | 1000 | 1200 |
| முருங்கைக்காய் | 1800 | 3000 | 2000 | 2400 | 2000 |
| போஞ்சி | 300 | 400 | 600 | 400 | 410 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 500 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 | 200 | 60 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 80-110 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 500 | 60-90 |
| இராசவள்ளி | 450 | 400 | 400 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 300 | 300 | 250 |
| முள்ளங்கி | 80 | 150 | 250 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 | 130 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 | 100 |

# இரு வெதுப்பகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(வவுனியா)

பாணின் நிறை தொடர்பாக இலங்கை பூராகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று திங்கட்கிழமை வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் நகர் பகுதி மற்றும் கூமாரங்குளம், பட்டாணிச்சூர், தோணிக்கல், மூன்று முறிப்பு பகுதிகளில் காணப்படும் வெதுப்பகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாணின் நிறை தொடர்பான விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

10 வெதுப்பகங்களில் மேற்கொண்ட சோதனைகளில் இரண்டு வெதுப்பகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 398





அதன் ஒரு பக்கம் சென்று இருட்டில் பிக்கு ஏதோ செய்தார். உடனே ஒரு வழி ஏற்பட்டது. உள்ளே வெளிச்சம் காணப்பட்டது. பிக்கு அங்கு வைத்திருந்த தீபத்தைக் கையில் ஏந்திக் கொண்டார். மற்ற மூவரும் உள்ளே வந்ததும் வழியும் அடைபட்டது. வெளியே தடாகத்தில் சிங்க முகத்திலிருந்து விழுந்த அருவியின் ஓசை மிக இலேசாகக் கேட்டது. இல்லாவிட்டால் ஒரு கணத்துக்கு முன்னால் அப்படித் தடாகக் கரையில் நின்று கொண்டிருந்தோம் என்பதையே அவர்களால் நம்ப முடியாமல் போயிருக்கும்.

குறுகலான சுரங்கப் பாதை வழியாக அவர்கள் சென்றார்கள். பாதை வளைந்து வளைந்து சென்றது. முடிவில்லாமல் சென்று கொண்டிருப்பதாகத் தோன்றியது. அவர்கள் காலடிச் சத்தமும் அதன் எதிரொலியும் பயங்கரத்தை உண்டாக்கின. வந்தியத்தேவனுக்கு நடு நடுவே இளவரசர் ஏமாந்து போய் ஏதோ ஒரு சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டாரோ என்ற ஐயம் உண்டாயிற்று.

பாதை அகன்று அகன்று வந்து கடைசியில் ஒரு மண்டபம் தெரிந்தது. எப்பேர்ப்பட்ட மண்டபம்? பிக்கு கையில் பிடித்து வந்த தீபத்தில் சிறிய பகுதிதான் மங்கலாகக் கண்ணுக்குப் புலனாயிற்று. ஆயினும் அதன் தூண்கள் பளிங்குக் கல்லினால் ஆன தூண்கள் என்பது தெரிந்தது.

நாற்புறமும் புத்தர் சிலைகள் தரிசனம் தந்தன. நிற்கும் புத்தர்கள் படுத்திருக்கும் புத்தர்கள், போத நிலையில் அமர்ந்திருக்கும் புத்தர்கள், ஆசீர்வதிக்கும் புத்தர்கள், பிரார்த்தனை செய்யும் புத்தர்கள் இப்படிப் பல புத்தர் சிலைகள் தோன்றின.

பளிங்கு மண்டபத்தை தாண்டி அப்பால் சென்றார்கள். மறுபடி ஒரு குறுகிய பாதை, பின்னர் இன்னொரு மண்டபம் இதன் தூண்கள் தாமிரத் தகடுகளினால் ஆனவை. இரத்தினச் சிவப்பு நிறம் பெற்றுத் திகழ்ந்தன. இந்த மண்டபத்தின் மேற்கூரையிலும் செப்புத் தகடுகள். அவற்றில் பலவகைச் சித்திர வேலைப்பாடுகள். நாலாபுறமும் வித விதமான புத்தர் சிலைகள். இம்மாதிரியே அபூர்வமான மஞ்சள் நிற மரத்தூண்களை உடைய மண்டபம். யானைத் தந்தங்களால் இழைத்த தூண்களைக் கொண்ட மண்டபம் இவற்றையெல்லாம் கடந்து சென்றார்கள்.

அதிவேகமாக நடந்து சென்ற போதிலும் வந்தியத்தேவன் ஆங்கங்கே தூண்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டே போனான். இளவரசர் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது முன்னோக்கிய பார்வையுடன் சென்றது அவனுக்கு அளவிலா வியப்பை அளித்தது.

உலோக மண்டபங்களையெல்லாம் தாண்டிக் கடைசியில் சாதாரண கருங்கல் மண்டபம் ஒன்றுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் விசாலமான அம்மண்டபத்தில் அபூர்வமான காட்சி தென்பட்டது. முந்தைய மண்டபங்களில் புத்தர் பெருமானின் சிலைகளைத் தவிர மனிதர் யாருமில்லை. இந்தக் கருங்கல் மண்டபத்தில் புத்த பிக்குக்கள் பலர் கூடியிருந்தார்கள். அவர்களுடைய முக மண்டலங்கள் தேஜஸ் நிறைந்து திகழ்ந்தன. அவர்களுக்கு மத்தியில் மகா தேரோ குரு நடுநாயகமாக ஒரு பீடத்தில் வீற்றிருந்தார். அவருக்கு எதிரே நவரத்தின கசிதமான ஒரு தங்கச் சிங்காதனம் காணப்பட்டது. அதன் அருகில் ஒரு பீடத்தின் மேல் மணிமகுடம் ஒன்றும் உடைவாளும் செங்கோலும் இருந்தன. மண்டபத்தில் நாலாபுறமும் தீபங்கள் எரிந்தன. தீபச் சுடரின் ஒளியில் தங்கச் சிங்காதனமும், மணிமகுடமும், உடைவாளும் ஜொலித்துத் திகழ்ந்தன.

இளவரசர் முதலியோர் அந்த மண்டபத்துக்குள் நுழைந்ததும் பிக்குகள் அனைவரும் எழுந்து நின்று "புத்தர் வாழ்க" "தர்மம் வாழ்க", "சங்கம் வாழ்க" என்று கோஷித்தார்கள்.


இளவரசர் மகா தேரோ குருவின் சமீபம் வந்து வணங்கி நின்றார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பேராசை பெருநஷ்டம்



ஒரு விவசாய தோட்டத்துல ஒரு அணிலும் ஒரு எலியும் வாழ்ந்துகிட்டு வந்துச்சுங்க.

அது ஒரு சோளம் விளைவிக்கும் தோட்டம் என்கிறதனால விளைவிச்ச சோளத்த எல்லாம் பக்கத்தில ஒரு குடோன்ல சேமிச்சு வச்சிருந்தாங்க.

அந்த குடோனுக்குள்ள போன எலி ஒரு பெட்டிக்குள்ள சோளம் நிறைய இருக்குறத பார்த்துச்சு.

அந்த சோளம் வச்சிருக்க பெட்டி நல்லா இருக்கமா மூடி இருந்துச்சு ஆனா ஒரு சின்ன ஓட்ட மட்டும் உள்ள போக இருக்குறத பார்த்துச்சு அந்த எலி.

உடனே அந்த ஓட்ட வெளியா உள்ள போச்சு அந்த எலி.

உள்ளபோன எலி நிறைய சோளத்தை தின்னுச்சு நிறய சோளம் தின்னதால அதோட வயிறு பெருசா ஊதிக்கிடுச்சு.

எலியோட வயிறு பெருசானதால அந்த எலி உள்ள போன ஓட்ட வழியா வெளியில வர முடியல

அப்ப அங்க வந்துச்சு அணில் , அதிகமா தின்னுட்டு வெளியில வர முடியாம தவிச்ச எலிய பார்த்த அணில் சிரிச்சிச்சு.

நீ எப்பவும் பேராசைகாரனா இருக்க, அதனால தான் அளவுக்கு அதிகமா தின்னுட்டு இப்படி ஆபத்துல சிக்கிக்கிட்ட.

நீ உள்ள போறப்ப இருந்த நிலைக்கு திரும்ப வந்தா தான் நீ வெளியில வர முடியும் அது வரை காத்திருன்னு சொல்லுச்சு

ஒருநாளைக்கு அப்புறமா அந்த எலியோட வயித்துல இருந்த சோளம் எல்லாம் செமிஞ்சு அதோட வயிறு சுருங்கிடுச்சு.

இப்ப அந்த எலி சுலபமா வெளியில வந்துச்சு, தன்னோட தவறை சுட்டி காட்டிய அணிலுக்கு நன்றி சொல்லுச்சு அந்த எலி.

பேராசை துரதிர்ஷ்டத்திற்கு வழிவகுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில்
தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.
– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டாமைபோல் நடக்கும் அதிகாரிகளை என் செய்வது

யாழ்ப்பாணத்து ஊடகங்கள் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர வேண்டும். அதன்மூலமாக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

இதைவிடுத்து சீண்டுவதாகச் செய்திகளைப் பிரசுரிப்பது அவ்வளவு நல்லதல்ல என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கூறியதாக சமூக வலைத்தளப் பதிவொன்றில் பார்வையிட்டோம்.

யாழ்ப்பாணத்து ஊடகங்களைப் பரிசீலனை செய்ததன் அடிப்படையிலேயே யாழ். மாவட்ட அரச அதிபர் தனது கருத்தை முன்வைத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

அதேவேளை தகவல் தொடர்பாடல் அமைச்சு, ஊடகவியலாளர்களுக்கு நடத்திய செயலமர்வின் தொடக்கவுரையில் மேற்போந்த கருத்தை அரச அதிபர் கூறியிருப்பதும் பொருத்தப்பாடு கருதியதென்றவகையிலும் வழுவமைதியடைய முடியும்.

எதுவாயினும் யாழ்.மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் சமூகநலன் மீது மிகுந்த கரிசனை கொண்ட அரச அதிபர் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

அவ்விதம் சமூக நலனில் கரிசனை கொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் முன் நாம் முன்வைக்கக்கூடிய ஒரு முக்கியமான விடயம் உண்டு.

அதாவது எங்கள் தமிழர் பிரதேசத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளில் கணிசமானவர்கள் பண்பாகவும் உத்தியோகத்தர்களை – பொதுமக்களை மதித்தும் உரையாடுகின்றனர்.

அத்தகையவர்களின் பெருந்தன்மையை ஊழியர்களும் பொதுமக்களும் வியந்து போற்றுகின்றனர். தங்களின் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மனதார எண்ணுகின்றனர்.

ஆனால் சில அதிகாரிகள் மிகமோசமானவர்களாக நடந்து கொள்கின்றனர் என்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், தம்மோடு வேலை செய்கின்ற உத்தியோகத்தர்களைத் தரக்குறைவாகப் பேசுவது, பொதுமக்களுடன் சீறிச் சினப்பது, ஏதோ அந்தத் திணைக்களத்தின் முழுப்பொறுப்பையும் தாமே சுமப்பது போன்ற பிரமையில் கதைப்பது.

கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும்போது பணியாளர்களின் மனங்களை நோகடிப்பது, பகிரங்கமாக ஏளனப்படுத்துவது. ஏதோ தன்னைவிட்டால் ஆளில்லை என்பது போல காட்டிக்கொள்வது, தமக்கு முன்பிருந்த அதிகாரிகளைக் குறைகூறுவது.

அர்ப்பணிப்போடு சேவையாற்றியவர்களை மதிக்கவும் அவர்களைப் பாராட்டவும் தெரியாமல் உதாசீனப்படுத்துவது என சிறுமைத்தனமாக நடந்து கொள்ளும் அந்த அதிகாரிகளின் செயல்களால் பணியாளர்கள் மனவிரக்திக்கு ஆளாகின்றனர்.

குறித்த அதிகாரி, குறித்த பதவியில் இருக்கும்வரை எமது பணியை அர்ப்பணிப்போடு செய்யமாட்டோம் என ஊழியர்கள் தமக்குள் சபதம் செய்கின்றனர். இதனால் அரச சேவை வினைத்திறனற்றுப் போகிறது.

இதுவே அரச அமைப்புகளின் செயற்றிறனின்மைக்கு மூலகாரணமாகும்.

அதேவேளை தமது ஆளுகைக்குட்பட்ட அதிகாரிகள் தமது ஊழியர்களுடன் எப்படி நடந்து கொள்கிறார்கள். கூட்டங்களில் எப்படிப் பேசுகிறார்கள். ஒருமையில் பேசுகின்ற அதிகாரிகள் யாவர் என்பவற்றையெல்லாம் அந்தந்த மாகாண ஆளுநர்கள் அறிய வேண்டும்.

இதைவிடுத்து கையொப்பம் இடுவதும் கூட்டம் நடத்துவதுமே தமது பணி என ஆளுநர்கள் நினைத்தால், பொதுமக்கள் பாவம் என்பதாகவே நிலைமை முடியும்.

எனவே நாட்டாமைத்தனத்துடன் நடந்து கொள்ளும் குறிப்பிட்ட அதிகாரிகள் குறித்து பலரும் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்ற விடயம் இங்கு குறித்துரைக்கத்தக்கது.

# அரசின் வருமானம் உயர்ந்தால் மட்டுமே அரச ஊழியர்களிற்கு சம்பள உயர்வு

## மத்திய வங்கி திட்டவட்டம்

(கொழும்பு)

வருமானம் அதிகரித்தால் மாத்திரம்தான் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் வாங்கி அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தில் 3 வீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம். நாட்டின் உற்பத்தி செயல்முறை 3 வீதமாக அதிகரிக்க வேண்டும். எனவே பொருளாதாரம் அதிகரிப்பது முக்கியமாகும்.

அதற்கான பின்னணியையே உருவாக்கிக் கொண்டு செல்கின்றோம். அதன் மூலமே மக்களால் ஏதாவது நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும்.

வருமானம் அதிகரித்தால் மாத்திரம்தான் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க முடியும். கடன் வாங்கி சம்பளத்தை அதிகரிக்க முடியாது. இதற்கு சிறிது காலம் எடுக்கும்.

பொருட்களின் விலை அதிகரிப்பு ஏற்பட்ட மட்டத்துக்கு வித்தியாசத்தை ஈடுகட்டுவதாயின், அரசின் வருமானம் அதிகரிக்க வேண்டும். அதனை ஒரேயடியாகச் செய்ய முடியாது என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## முத்துக்குமார சுவாமிகளின் 75வது குருபூசை தினம்

(நயினாதீவு)

நயினாதீவு முத்துக்குமார சுவாமிகளின் (நயினாதீவு சாமியார்) 75 வது குருபூசை நிகழ்வுகள் நாளை சுவாமிகளின் சாமாதிக் கோவிலான நயினாதீவு சோமஸ்கந்த ஈச்சரத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு விஷேட 108 சங்காபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து சுவாமிகளின் 75 வது குருபூசையினைச் சிறப்பிக்கும் வண்ணம் ஞானமுத்து (மீள் பதிப்பு) நூல் வெளியீடும் சுவாமிகள் அருளிச் செய்த பாடல்கள் அடங்கிய இசைப் பேழை வெளியீடும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து அருள் ஒளி நிலையத்தில் (மடம்) அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறும் என அருள் ஒளி நிலையத் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## லொத்தர் வியாபாரிகள் இன்றுமுதல் பணி பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள லொத்தர் விற்பனை முகவர்கள் இன்று முதல் லொத்தர் விற்பனையில் இருந்து விலகவுள்ளதாக அகில இலங்கை லொத்தர் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

லொத்தர் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு கொமிசன்கள் வழங்கப்படாமை, சலுகைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படாமைக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ள தாக சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## முட்டை விலை மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் முட்டை ஒன்றின் விலை 40 ரூபாயாக குறைக்கப்பட்ட போதிலும் மீண்டும் ஒரு முட்டையின் விலை 58 ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

தாம் ஒரு முட்டையை மொத்த விலையில் 60 ரூபாயுக்கு கொள்வனவு செய்வதாக பேக்கரி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை கோழிப் பண்ணை உரிமையாளர்களே இவ்வாறு முட்டை விலையை உயர்த்தியதாக முட்டை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இடைத்தரகர்கள் குழுவொன்றே முட்டையின் விலையை அதிகரித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வேகமாக அதிகரித்து வரும் முட்டை விலையைக் கட்டுப்படுத்த எதிர்காலத்தில் சில நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## சட்டவிரோத மரக்கடத்தல் ஒருவர் பொலிஸாரால் கைது

(புத்தூர்)

யாழ்ப்பாணம் - புத்தூர் பகுதியில் நேற்று அனுமதிப் பத்திரமின்றி தேக்கமரப் பலகைகளை சட்டவிரோதமாக கொண்டுவந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வன்னிப் பகுதியில் இருந்து லொறியில் தேக்க மரப் பலகைகள் கொண்டுவரப்பட்ட போதே காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேக நபர் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7,33)

## கஞ்சிக் கிடாரத்தில் தவறி விழுந்து சிறுவன் படுகாயம்

(மிருசுவில்)

மிருசுவில் பகுதியில் தேவாலயமொன்றில் கஞ்சிக்கிடாரத்தில்விழுந்து சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

குறித்த தேவாலயத்தில் விசேட நிகழ்வொன்றிற்காக கஞ்சி தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் போது, மூன்றரை வயது சிறுவன் ஒருவர் தவறுதலாக கஞ்சிக் கிடாரத்துக்குள் தவறி விழுந்துள்ளான்.

சிறுவன் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ம-7)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(கற்பிட்டி)

கற்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கற்பிட்டி - பலாவியா வீதியில் உள்ள குரிங்கம்பிட்டிய கத்தோலிக்க தேவாலயத்திற்கு முன்பாக வாகன விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டியிலிருந்து பலாவியா நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்று வீதியில் திரும்பும் போது அந்த வீதிக்கு முன்னால் வந்த மற்றுமொரு முச்சக்கரவண்டியுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.


விபத்தின் போது 2 முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் உட்பட 8 பேர் பயணித்துள்ள நிலையில்

விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்தவர்கள் கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

65 வயதுடைய கற்பிட்டி - மண்டலக்குடாவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## முதலிரு மேற்கத்துய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III



**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

17

ரோமன் டச்சுச்சட்டம் இலங்கையில் இருந்த பல்வேறு டச்சு நீதிமன்றங்களினால் நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. கொழும்புப் பட்டணத்தில் றாட் வான் ஜஸ்ற்றை என்று டச்சு பாஷையில் வழங்கப்பட்ட நீதிமன்றம் இருந்தது. இதுவே அக்கால உயர்நீதிமன்றமாகவும் அமைந்தது. இங்கே கோட்டையில் வசித்த ஐரோப்பியர் சம்பந்தமான வழக்குகள் விசாரணை செய்யப்பட்டன. கீழ் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிராக மனுச் செய்யப்படும் அப்பீல்கோடும் இதுவாக இருந்தது.

சுப்பிறிம்கோடு அல்லது உயர் நீதிமன்றத்தின் அங்கத்தவர்கள் சட்ட நிபுணர் அல்லது நியாயவாதிகள் அல்லாத முன்னர் கூறிய அரசியற்சபை அங்கத்தவர்களே இம்மன்றத்து அங்கத்தவராகவும் இருந்தனர்.

மாகாணங்களில் லான்ட் றாட்ஸ் சிவில் றாட்ஸ என்ற இருவித நீதிமன்றங்கள் இருந்தன. இப்போது நாம் மாவட்ட நீதிமன்றம் என்று வழங்கும் நீதிமன்றங்களுக்கு ஏறக்குறைய ஒப்பானவையே லான்ட் றாட்ஸ் என்பன. மாகாணத்துத் திஸாவை, பிஸ்கால், ஒன்று அல்லது இரண்டு சிரேஷ்ட சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர், மகா முதலியார் என்பவர்களே இந்த நீதிமன்றங்களின் நீதிபதிகளாவர். அன்றைய 120 றிக்ஸ் டொலருக்கு மேற்பட்ட தொகை சம்பந்தமான வழக்குகளை இந் நீதிமன்றம் பொதுவாக விசாரணை செய்தது. 120 றிக்ஸ் டொலருக்கு குறைந்த தொகை சம்பந்தமான வழக குகளை "சிவில் றாட்ஸ" என்னும் நீதிமன்றம் விசாரணை செய்தது.

### அரசாங்க வருவாய்

சிங்கள அரசர்கள் எவ்வாறு தம் நாட்டை ஆட்சி புரிந்தனரோ அவ்வாறே டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியும் தன் கீழ் இருந்த மாகாணங்களை ஆட்சி செய்தது. சிங்கள அரசர் எவ்வாறு சகல நிலங்களுக்கும் சொந்தக்காரராகவிருந்து விளங்கினரோ அவ்வாறே இக்கம்பெனியும் நிலங்கள் முழுவதுக்கும் தானே உரிமையாளி என்றும் அரசனுக்குக் கொடுபடவேண்டிய அரசிறை முழுவதுக்கும் தானே உரித்தாளி என்றும் கூறிக் கருமம் ஆற்றியது. இன்னும், போர்த்துக்கேய அரசர் இத்தீவின் வர்த்தக விடயமாகக் கொண்டிருந்த ஏகபோக உரிமையையும் தனக்காக்கியது. இதன் பயனாக இந்நாட்டில் இருந்த சகல இலாபகரமான முயற்சிகள் அனைத்தும் டச்சுக் கம்பெனியின் அதிகாரத்திலேயே இருந்தன.

பெனியின் அனுமதியில்லாமல் எவராவது சரி வியாபார முயற்சியில் ஈடுபட முடியாதிருந்தது. புடைவை முதலாம் பருத்திப் பொருள்களை அது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தது. புடைவைகளுக்கு யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் சாயம் ஊட்டுவர். இதனைவிட ஈயம், செம்பு, பித்தளை என்னும் உலோக வகைகளையும் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி இறக்குமதி செய்தது. வரி விதித்தலாலும் டச்சுக்காரர் வருமானம் பெற்றனர். பல்வேறு வகைப்பட்ட சாதியினருக்குப் பல்வேறு விதமான வரிகள் இருந்தன, இவற்றை எல்லாம் சேர்த்துத் தலைவரி என்றனர்.

இவற்றுள் ஊழியவரி என்ற ஒன்றும் அதிகாரி வரி என்ற ஒன்றும் இருந்தன. குறித்த சில சாதியினரிடம் இருந்து அறவிடப்பட்டதே ஊழிய வரி. சாராயக்குத்தகை, கடைக் குத்தகை, மீன்குத்தகை என்பவற்றை விற்பதாலும் டச்சுக்காரர் வருமானம் ஈட்டினர். பூதல்வரி விதித்துப் பெருக்தொகைப் பணம் வருமானமாகப் பெற்றனர். இன்னும் ஆயக் குத்தகைகளினாலும் சுங்கப் பகுதியாலும் வருமானம் கிடைத்தது. யானைகள், உப்பு, வெண்கட்டி, முத்துக்கள் என்பவற்றை விற்பதாலும் ஓர் தொகைப்பணம் வருமானமாகியது.

தங்கள் வருவாயின் பெரும் பாகத்தைக் காணி பூமிகளிலிருந்தே டச்சுக்காரர் பெற்றனர். வட்டுபடே அல்லது காணிவரி என்ற ஓர் வரியை அவர்கள் விதித்தார்கள். விழைந்த தானியத்தில் அல்லது தோட்டப் பிரயோசனத்தில் 1/10 தொடக்கம் 1/2 வரை காணிக்காரர் இறுக்க வேண்டுமென இருந்தது. தென்னந் தோட்டங்களுக்கு டச்சுக்காரர் நல்ல மதிப்பு அளித்தனர்.

தென்னையில் இருந்து பெறப்படும் தேங்காய் நெய், சாராயம் என்பவற்றை அவர்கள் ஏற்றுமதி செய்து பெரும் பொருள் ஈட்டினர். சாராயம் தென் இந்தியாவுக்கும் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. தும்புக் கயிற்றையும் அவர்கள் சேகரித்துக் கப்பல்களில் அனுப்பி வியாபாரம் செய்தனர். பாக்கு தென் இந்தியாவிற்கு அனுப்பி விற்கப்பட்டு நல்ல இலாபம் கொடுத்தது. மிளகு, கறுவா என்பவற்ருள் டச்சுக்காரர் ஏகபோக உரிமை கொண்டவர்களாய் அவற்றை ஏற்றுமதி செய்து தக்க இலாபம் கண்டனர்.

ஊரவர்கள் ஒவ்வொருவரும் தாம் அரசாங்கத்துக்கு இறுக்க வேண்டிய வரிகளைக் கிரமமாகக் கொடுக்கவும், அவர்கள் அவ்விடயத்தில் தவறாமல் இருக்கவும் டச்சுக்காரர் "தோம்பு" என்று வழங்கப்படும் சாதனங்களைத் தயார் செய்தார்கள். வரிகள் கொடுக்க வேண்டியவர்களின் பெயர்கள், அவர்கள் இறுத்த வரியின் தொகை போன்ற விபரங்கள் இத் தோம்புகளில் அவ்வப்போது குறிக்கப்படும். இப்படியாகக் குறிக்காமையினால் தான் போர்த்துக்கேயரும் அவர்களின் ஈவிரக்கமற்ற பரிவாரங்களும் தமக்கு மானிய முறை ஆட்சிப்படி வரவேண்டிய பாக்கிகளைக் கண்டபடி வசூலிக்க ஊரவர்களை வருத்தினர்கள். போர்த்துக்கேயருடன் டச்சுக்காரரை இவ்விடயமாக ஒப்பிட்டு நோக்கும்போது அவர்கள், அதாவது டச்சுக்காரர் எவ்வளவோ நீதித் திறமையும் நிறையுணர்ச்சியும் கொண்டிருந்தனர் என்றே சொல்ல வேண்டும். தோம்பு முறையை அக்காலத்தவர் எப்படித்தான் வெறுத்த போதிலும், பணம் பறிக்கும் கிராதகரான அதிகாரிகளிடம் இருந்து ஊரவர்களைப் பாதுகாக்கும் ஓர் சாதனமாக அது விளங்கியது என்பதை மறுக்கமுடியாது.

### பயிர்ச்செய்கைக்கு அத்திவாரம்

தோட்டப் பயிர்ச் செய்கைக்கு அத்திவாரம் இட்டவர்கள் டச்சுக்காரரே என்றும் சொல்லலாம். தாம் ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய கறுவா, மிளகு, தேங்காய், கோப்பி என்பவற்றைப் பெருந்தொகையில் விளைவிக்க வேண்டி அவர்கள் பல தோட்டங்களைத் திறந்தார்கள் இலங்கை உணவு விடயத்தில் தற்பாதுகாப்புடையதாயிருக்கவும், உணவுப் பொருள்களின் பொருட்டு வெளிநாடுகளுக்குப் பணம் செல்லாமல் இருப்பதற்குமாக அவர்கள் நெல் விவசாயத்துக்கு ஊக்கம் அளித்தனர்.

நாட்டில் விளைவிக்கப்பட்ட கறுவா, மிளகு முதலான பொருட்களைக் கொழும்பில் இருந்து புறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டியிருந்ததால், அப்பொருள்களைக் கொழும்புக்கு வருவிப்பதற்கு றோட்டுக்களும் கால்வாய்களும் தேவையாக இருந்தன. இவற்றை டச்சுக்காரர் இட்டுத் தம் வியாபாரத்தைப் பெருக்கினர். டச்சுக்காரர் நில அபிவிருத்தியின் பொருட்டுக் கைக் கொண்ட முறைகளை அவர்களுக்குப்பின் இலங்கையைப் பரிபாலித்த பிரிட்டிஷாரும் கைக்கொண்டனர். இவ்வாறாக, தோட்டப் பயிர்ச் செய்கையே இலங்கையின் செல்வநிலைக்கு ஆதாரமாக இருந்தது.

ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகளை ஒழுங்குபடுத்தியதுடன் அமையாது தங்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருட்களை தங்கள் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களிலே விளவிக்கவும் டச்சுக்காரர் விரும்பினர். கறுவா நிறைய விளைவிக்கப்பட்ட கண்டி இராச்சியத்திலிந்து டச்சுக்காரருக்கு தொந்தரவு இருந்து வந்தது. எனவே கண்டி அரசர்களின் தொந்தரவுகளினின்றும் விலகி, மருதானை போன்ற இடங்களில் டச்சுக்காரர் தாங்களாகவே கறுவாமரங்களை உற்பத்தி பண்ணினர். அதுமட்டுமன்றி மலைநாட்டுப்பகுதிகளில் மிளகு, ஏலக்காய், கோப்பிக்கொட்டை போன்ற பொருட்களை கண்டி இராச்சிய மக்களால் பயிரிடுவித்து அவற்றை டச்சுக்காரருக்கு நேரடியாக விற்பனை செய்வதற்கும் ஊக்கமளிக்கப்பட்டது.

கரும்பு பயிரிடப்பட்டது. பருத்தி வன்னி வனப் பகுதிகளில் விளைவிக்கப்பட்டது. நெசவாலைகள் புத்தளத்தில் திறக்கப்பட்டன. யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் நெசவுகாரர்களும் சாயம் ஊட்டுபவர்களும் மிகுதியாக வசித்துவந்தனர். இவையன்றி நீர்ப்பாசனவசதிகள் அபிவிருத்தியடைந்தன. ஏரிகளும், குளங்களும் வெட்டப்பட்டு மிகப் பெரிய நிலப் பரப்புக்கள் சாகுடிக்கு கொண்டுவரப்பட்டன. நிலத்தை உழுது பண்படுத்துவதற்கு இந்தியாவிலிருந்து தொழிளாளர் தருவிக்கப்பட்டனர்.

தோட்டச் செய்கை விருத்தியிலேயே அரசாங்கம் கூடிய கவனத்தைச் செலுத்தியது. அதன் பயனை நாம் இப்போது அநுபவிக்கிறோம். ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தியாக்கி அவற்றைப் புறநாடுகளுக்கு அனுப்பி ஆதாயம் பெற்றோரது செய்கையினால் நமது நெல் விவசாயமும் கைத்தொழில்களும் தேடுவாரற்றுக் கீழ் நிலைமையை எய்தின.

### யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் ஆட்சி

ஒல்லாந்தரிடம் கொழும்பு வீழ்ச்சியடைந்த பின்னர், அவர்களின் கவனம் யாழ்ப்பாணத்தின் மீது திரும்பியது. 1658 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கொழும்பிலிருந்து புறப்பட்ட ஒல்லாந்தப் படைகள் தரை வழியாக நீர்கொழும்பு, மன்னார் ஊடாகப் பூநகரிப் பகுதியை அடைந்து அங்கிருந்து நீரேரியைக் கடந்து எவ்வித எதிர்ப்புக்களும் இன்றி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் நுழைந்தனர். அங்கிருந்து, சாவகச்சேரி, நாவற்குழி ஆகிய ஊர்களினூடாகச் சுண்டிக்குழியை அடைந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்றி வெடியில்...

யைச் சேர்ந்த பழனி வடிவேலு (வயது-65) என்ற நபரே உயிரிழந்தவராவார்.

தேன் எடுப்பதற்காக குறித்த நபரும் மேலும் சிலரும் காட்டுக்கு சென்றுள்ளனர். இதன்போது பன்றிக்காக வைக்கப்பட்ட வெடியில் குறித்த நபர் சிக்குண்டுள்ளார்.

படுகாயம் அடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-7,100)

## பாடசாலைகள்...

புதிய தொழிநுட்பத்தின் மூலம் மாணவர்கள் நேரடியாக கல்வியைத் தொடர சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி 3,000 உயர்தர பாடசாலைகள் டிஜிட்டல் மயமாக்கப்படும் என்றும் அதற்காக எதிர்வரும் மார்ச் மாதம் முதல் ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

நாட்டின் அனைத்து பிள்ளைகளுக்கும் கல்வியில் சம வாய்ப்புகளை வழங்குவதே கல்வி அமைச்சின் நோக்கம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## சாந்தனை...

செய்வதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சாந்தனை இலங்கைக்கு அழைத்துவரும் தேவையினை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி விரைவாக அதற்கான பணிகளை முன்னெடுப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிப்பதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன், வெளிவிவகார அமைச்சரிடம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் நடத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

சாந்தனை இலங்கைக்கு அழைத்துவர அனுமதிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், மனோ கணேசன் ஆகியோர் அண்மையில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மக்களின்...

உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விளக்கமளித்துள்ளார்.

இந்தியாவின் இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட இராஜதந்திரியான ஸ்ரீ சந்தோஷ் ஜா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக நிலவிவரும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களுடன் தொடர்பான பல்வேறு விடயங்களை இருவரும் பரிமாறிக் கொண்டனர். தற்போதைய அரசாங்கம் கொண்டு வந்துள்ள சட்டவிரோத மற்றும் நியாயமற்ற வரிக்கொள்கை குறித்த விடயங்களை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்திய உயர்ஸ்தானிகருக்கு தெரியப்படுத்தினார்.

நியாயமற்ற முறையில் அரசாங்கம் விதித்த பெறுமதி சேர் வரியினால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதகமான விளைவுகளின் தாக்கம் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது உயர்ஸ்தானிகருக்குத் தெளிவுபடுத்தினார்.

அவ்வாறே, தற்போதைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளில் ஏற்படுத்தி வரும் தாக்கம் குறித்த விடயங்களையும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

திட்டமிட்ட திகதிகளில் நடத்தப்பட வேண்டிய தேர்தல்கள் வேண்டுமென்றே ஒத்திவைக்கப்பட்டு வருவதான விடயங்கள் குறித்தும் இங்கு எதிர்க்கட்சித் தலைவரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இது தவிர இந்த வருடம் தேர்தல் வருடமாக அமைந்திருந்தாலும் தற்போதைய அரசாங்கம் "நிகழ்நிலை காப்பு" என்ற சட்டத்தை நிறைவேற்றி, மக்களின் கருத்துக்களை தெரிவிக்கும் உரிமை, தகவல் அறியும் உரிமை என்பவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும், சமூக ஊடக வலையமைப்புக்களை முடக்க மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்த இச்சட்டத்தினால் முடியும்.

தேர்தல் வருடத்தில் இவ்வாறான சட்டமூலத்தை கொண்டு வருவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகளில் தேவையற்ற தலையீடுகள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன் போது மேலும் சுட்டிக் காட்டினார்.

இந்நிகழ்வில், இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார, பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் செயற்பாட்டு பிரதானி சட்டத்தரணி சுஜீவ சேனசிங்க, எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜய குணவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

## பருத்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மருத்துவரும், எதிரே வந்த சிறிய ரக வாகனமும் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றது. பலத்த காயமடைந்த மருத்துவரை அருகிலிருந்தவர்கள் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

தற்போது மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு குறித்த மருத்துவர் மாற்றப்பட்டுள்ளார். (ம-7,60)

## நாளை பாராளு..

பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காலை 10.30 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2024.02.05
சீட்டிழுப்பு இலக்கம் 0207
R 4 3 4 7 7 3 R

தன நிதானய
திகதி - 2024.02.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1411
D 27 34 57 65 D
66647

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3623
சீட்டிழுப்பு திகதி 05.02.2024
W 17 38 57 75
W 63696

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.05
சீட்டிழுப்பு இலக்கம் 0690
மேஷம் 05 11 31 39 மேஷம்
29946 20

மஹஜன சம்பத
திகதி 2024/02/05
சீட்டிழுப்பு இலக்கம் 5381
V 3 8 2 0 6 9

மெகா பவர்
திகதி 05/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1729
R 10 37 41 42 49
49265

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.02.2024 வெற்றி வாரம் 089 வர்ணம் வயலட்
R 2 2 3 0 0 1
67104
28,404,516.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2355 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.02.05 தினம் திங்கட்கிழமை
11 15 28 42 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,023,220.80
27451

சனிதா
திகதி 2024.02.05 வெற்றி வாரம் 4516
21 41 47 64 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,356,476.00
1 7 3 5 0

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4067 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.05 தினம் திங்கட்கிழமை
10 16 30 39 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,766,034.40
570704

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 13 20 40 41 55
1531
05.02.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 502,460,016.20

ஜயோதா
திகதி 2024.02.05 வெற்றி வாரம் 1997
04 24 43 47 R
ரூ. 21,822,990.80
20381

அட கோடீபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2181
சீட்டிழுப்பு திகதி: 2024.02.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,051,224/-
13 25 60 74 S
827704

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18890)

076 825 7716 (ஆகாஸ்)

## CANADA & UK VISA

சகல ஆவணங்களும் சட்ட வல்லுனர் ஆலோசனையுடன் செய்து கொடுக்கப்படும்.

முறையான ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு நாம் பெற்றுக் கொடுப்போம்.

Exponet Overseas Consultants
345, Kasthurijar Road, Jaffna. (18899)

021 222 5686 | 071 415 0995

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

A9 வீதி கைதடி சந்திக்கு அருகாமை

- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
- வட மாகாண சபை 300 மீற்றர்
- கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

தொடர்புகளுக்கு

071 173 3911
076 853 5022

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு கொத்து றொட்டி போடுதல், பிறைட் றைஸ் தாயாரித்தல், றொட்டி வேலை செய்தல் போன்ற வேலைகளில் மிகவும் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை. (C-8288)

077 649 1027

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இருபாலை கிழக்கு, விதானையார் வீதியில் ( கற்பகப் பிள்ளையார் கோவில் முன் ) 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு
- வெட்டுக்கிணறு
- குடியிருப்பு பகுதி
- தென்னை உட்பட பயன்தரு மரங்கள்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 450 மீற்றர் (18898)

077 361 1032

உடனடி வேலைவாய்ப்பு

## கொசி உணவகம் மற்றும் தங்ககம்,

22 வருடங்களுக்கு மேல் யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனம், புதிதாக ஆரம்பிக்கவுள்ள கிளைக்கு பின்வரும் ஊழியர்கள் தேவை.

* Cooks * Kitchen helpers * Supervisors * Cashier
* Waiters * House keeping staffs * Cleaners * Delivery Boy:

முழு நேரம்/ பகுதி நேரம் வேலைக்கான இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

Hotel Management முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வெளிமாவட்டத்தில் உள்ளவருக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் கீழ் உள்ள தொலைபேசிக்கு உங்கள் சுயவிபரக் கோவையை அல்லது உங்கள் விபரங்களை அனுப்பவும்.

WhatsApp No: 070 222 7100 (C-8285)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-8286)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் சுவாமியார் வீதியில் அமைந்துள்ள சிறிய குடும்பத்திற்கு தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. (18903)

071 650 1650

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (10.02.2024)
( IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம் )

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level - I,II (10.02.2024)

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat [ Sri Lanka]
(AA1 - 10.02.2024)
G.C.E.O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
(AA2, AA3 -24.02.2024]
G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

Certificate Course in English

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna. (C-8228)

0212223382 | 0212229149
0774405917

Papers Lanka (Private) Limited

## பணி நிலை வேண்டுகை

Noble International Paper Lanka (Pvt) Ltd. நிறுவனமானது கைத்தொழில் பேட்டை அச்சுவேலியில் கடந்த 4 வருட காலமாக கடதாசி உற்பத்தியில் ஈடுபட்டு வரும் ஓர் நிறுவனமாகும்.

மேற்படி நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் வேலைக்கமர்த்தப்படவுள்ளார்கள்.

- இயந்திர திருத்துனர் / Mechanical Assistance
  - தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திர திருத்தம் தொடர்பான பாடநெறியுடன் குறைந்தது 2 வருட முன் அனுபவம்.
- தொழிற்சாலை தொழிலாளர்கள் / Factory Labours
  - க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடத்தில் சித்தி
  - ஆகக் குறைந்த வயதெல்லை 25 வருடங்கள்
- தொழிற்சாலை காவல் உத்தியோகத்தர் / Security Guard
  - க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடத்தில் சித்தி
  - ஆகக் குறைந்தது 2 வருட முன் அனுபவம் (ஆகக்குறைந்த வயதெல்லை 30 வருடங்கள்)
- தொழிற்சாலை சுகாதார தொழிலாளி
  - ஆகக் குறைந்தது 2 வருட முன் அனுபவம் (ஆகக்குறைந்த வயதெல்லை 30 வருடங்கள்)



மேற்படி பணிநிலைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு தங்கள் சுயவிபரக் கோவையை கடிதம் மூலம் அனுப்பி வைக்கவும்.

Noble International Paper Lanka ( PVT) Ltd.
Industrial Estate,
Atchuvely,
Jaffna.

அல்லது எதிர்வரும் 12.02.2024 (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு நேர்முகத் தேர்விற்கு நேரில் வரவும்.

தொடர்பு : 077 315 1654

Industrial Estate, Atchuvely, Jaffna, Sri Lanka.
Tel : 021 221 3000 (18900)

## தேவை

பளைப் பிரதேசத்தில் வேலை செய்வதற்கு மினி ஜே.சி.பி வாடகைக்குத் தேவை.



தொடர்பு
075 719 0110

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு

- பார்சல் கட்டுபவர்
- உணவு பரிமாறுபவர்

தேவை (18901)

சம்பளம் - 45,000 - 60,000
தங்குமிடம் + உணவு வழங்கப்படும்.

077 005 7577

உ
சிவமயம்

" நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும் "



புளியம்பொக்கணை
## நாகதம்பிரான் ஆலய
## பொங்கல் தொடர்பான அறிவித்தல்
## 2024

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா எதிர்வரும் 24.03.2024 ஆந் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் **எதிர்வரும் 09.02.2024ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில்** கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. குறித்த கலந்துரையாடலில் துறைசார்ந்த திணைக்களத் தலைவர்கள், உபயகாரர்கள், உற்சவ கால தொண்டர்கள் என சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம். (C-8287)

**குறிப்பு–** குறித்த ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 07.02.2024ஆந் திகதி நடைபெறவிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் குறித்த 09.02.2024 திகதிக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தகவல்
ஆலய பரிபாலன சபை
கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org